# அழகிய பெரியவன் சுட்டும் தலித் கலைகள்

*மு. பாஸ்கரன்*
முனைவர் பட்ட ஆய்வாளர்
சேதுபதி அரசு கலைக் கல்லூரி, இராமநாதபுரம்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783090

**ஆய்வுச் சுருக்கம்**

*பண்பாடு என்ற சொல்லானது பண், பாடு என்ற சொற்களின் இணைவால் உருவானது. பண் என்பதற்கு "செய்" என்ற பொருளுண்டு. பாடு என்ற சொல்லுக்கு முறை என்ற பொருளும் உண்டு. "திருந்திய முறையே" பண்பாடு ஆகும். "கல்சர்" என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகப் "பண்பாடு" என்ற சொல் வழங்கப்படுகின்றது. பண்பாடு என்பது இடத்துக்கு இடம் வேறுபடலாம். ஒத்த கூறுகளும் அதில் இருக்கலாம். மதங்கள் தங்கள் விதிமுறைகளுக்கேற்ப பண்பாட்டைக் கட்டமைக்கின்றன. சாதிகளுக்கிடையே தனித்தனி பண்பாடுகளைக் காண முடிகிறது. சில பண்பாட்டுக் கூறுகள் பிற சாதியோடு ஒத்தும் அமையலாம். தமிழர்களுக்கென்று உயர்வான பண்பாடு இருந்து வந்துள்ளது. தலித்துகளுக்கென்று தனித்துவமான பண்பாடு உள்ளது. பண்பாட்டில் கலைகளுக்குத் தனித்த இடமுண்டு. அழகிய பெரியவன் தலித்துகளின் கலைசார்ந்த வாழ்வியலைத் தனது புனைகதைகளில் பதிவு செய்துள்ளார். தலித் கலைகளை அழகிய பெரியவனின் புனைகதைகள் வழி ஆய்வது அவசியமானதாகும்.*

*"அழகிய பெரியவன் சுட்டும் தலித் கலைகள்" எனும் ஆய்வு கீழ்க்காணும் நோக்கங்களைத் தன்னகத்தே கொண்டது.*

- *தலித் பண்பாடு என்ற சொல்லை வரையறுத்தல்*
- *மேட்டுக்குடி கலைகளிலிருந்து தலித் கலைகள் வேறுபட்டு நிற்பதனை வெளிளிக்கொணர்வது*
- *தலித்துகளின் கலை வாழ்வு பற்றிய புரிதலை ஏற்படுத்துவது*

*ஆகிய நோக்கங்களுடன் இவ்வாய்வு செய்யப்படுகிறது.*

*தலித்துகள் இயல்பிலேயே கலையுள்ளம் கொண்டவர்கள் என்பது ஆய்வின் கருதுகோளாகும்.*

*தொகுப்பாய்வு முறை, பகுப்பாய்வு முறை, விளக்கமுறை ஆகிய திறனாய்வு அணுகு முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.*

*பண்பாடு விளக்கம் - தலித் பண்பாடு - தலித் கலைகள் - நாட்டுப்புறக் கதைகள் - தாலாட்டுப்பாடல் - மழைப்பாடல் - தொழிற்பாடல் - விழாப்பாடல் - வழிப்பாட்டுப்பாடல் நாட்டுப்புற இசைக்கருவிகள் - கூத்து - கரகாட்டம் ஆகியவை ஆராயப்படுகின்றன.*
*ஆய்வில் கண்டறிந்த உண்மைகள் முடிவுகளாகத் தரப்பட்டுள்ளன.*

**முன்னுரை**

*மனிதனின் பண்பட்ட நடவடிக்கைகள் பண்பாடு ஆகும். மரபுவழியாகப் பெற்றுக் கொண்ட நடத்தைகளும், கல்வி வளர்ச்சியால் மாற்றமடையும் நடத்தைகளும் பண்பாடு எனக் குறிக்கப்படுகின்றன. உணவு, உடை, அணிகலன்கள், விளையாட்டுக்கள், திருமணம், விழுமியங்கள், வாழ்வியல், நம்பிக்கை, பழக்கவழக்கம், வழிபாடு, விழாக்கள், சடங்குகள், கலைகள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கிய கலைச்சொல் பண்பாடு ஆகும். தலித்துகளின் பண்பாட்டில் சிறப்பிடம் வகிக்கும் கலைகள் இங்கு ஆராயப்படுகின்றன.*

**பண்பாடு விளக்கம்**

*பண்பாடு என்பதற்குத் தொல். திருமாவளவன் கீழ்க்காணும் விளக்கத்தைத் தருகிறார்.*

"பண்பாடு என்பது, மக்களின் உணர்வுகளோடும், நம்பிக்கையோடும் தொடர்புடையதாகும். அது பகுத்தறிவுக்கு அல்லது அறிவியலுக்கு முரண்பட்டதாகவும் இருக்கலாம். மனிதனின் பிறப்பு முதல் இறப்புவரை அவன் கையாளுகிற நடைமுறைகள் யாவற்றிலும் சாதி, மதம், மொழி, இனம் போன்றவற்றின் அடிப்படையிலான பண்பாட்டு அடையாளங்கள் இடம் பெற்றிருக்கும்"[1] என்று அவர் கூறுகிறார்

இ.பி. டெய்லர் என்ற அறிஞர் "பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும் மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங்களும் அடங்கிய முழுமையான தொகுதி" என்று விளக்கம் தருகிறர்.[2]

**தலித் பண்பாடு**

தலித் இலக்கியம் தலித் பண்பாட்டில் மையம் கொள்ளுகிறது. தலித் மக்களின் அரசியலின் ஒரு பகுதியாகத் தலித் பண்பாடு விளங்குகின்றது. இப்பண்பாடு ஆதிக்கத்தை எதிர்க்கும் கலகப்பண்பாடாகும். ஆதிக்க சமூகத்தினர் உருவாக்கிய பண்பாட்டினின்று இது மாறுபட்டதாகத் திகழுகின்றது.

"நூற்றாண்டுக் கால அறியாமை, வறுமை, குற்ற உணர்வு, அச்சம், போன்ற மனச் சிக்கலில் ஊறிப்போன தலித் மக்கள், எளிதில் இவற்றிலிருந்து விடுபடாமல் இருக்கின்றனர். ஆதிக்கப் பண்பாட்டை, குறியீடுகளைச் சன்னஞ் சன்னமாக உதாசீனப்படுத்துவது, ஏற்க மறுப்பது, தாக்குவது, அவமதிப்பது, நக்கல் செய்வது என்ற ரீதியில் தான் மேற்சொன்ன மனச் சிக்கல்கள் அடி மனதிலிருந்து மடைமாற்றம் செய்யப்படும். இவற்றை எல்லாம் உள்ளடக்கிய ஒன்றே தலித் பண்பாடாகும்"[3] என்ற கருத்து தலித்பண்பாட்டின் இயல்பை எடுத்துரைக்கிறது.

தலித் இலக்கியம் தலித் பண்பாட்டைப் பதிவுசெய்கிறது. எழுத்து எப்போதும் வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது. வாழ்க்கை என்பது பண்பாட்டுடன் கலந்தது. எனவே பண்பாட்டை விவரிப்பது இலக்கியத்தின் தேவையாகி விடுகிறது. இது குறித்துப் பேசும் அழகிய பெரியவன் வாழ்க்கையோடு இணைந்த சடங்குகளையும், நம்பிக்கைகளையும், மரபையும், மொழியையும், பழக்க வழக்கத்தையும் இலக்கியம் பதிவு செய்ய வேண்டும் என்கிறார். இலக்கியம் பண்பாட்டுடன் தொடர்பு கொண்டது. புதியபண்பாட்டைக் கட்டுவதற்கு அடிப்படையாய் இருப்பது என்று பண்பாட்டுக்கும் இலக்கியத்துக்குமான தொடர்பைத் தெளிவுபடுத்துகிறார்.[4]

தொல். திருமாவளவன் தலித்பண்பாட்டை உழைப்பவர்களின் பண்பாடு என்றும் மக்கள் பண்பாடு என்றும் அடையாளப் படுத்துகிறார். "உழைக்கும் மக்களிடையே நிலவும் பண்பாடுகளை" மக்கள் பண்பாடு" என அடையாளம் கண்டாலும் அவற்றில் முற்போக்கான கூறுகளை அடையாளம் காணவேண்டியது அமைப்பாக்க நடவடிக்கைகளில் ஈடுபடுவோரின் கடமைகளாகும்'[5] என்றுரைக்கிறார்.

ஒரு தலித் படைப்பாளியால் தலித்துகளின் பண்பாட்டைஅப்படியேபதிவுசெய்ய இயலும். கிராமத்தில் வாழ்ந்த வாழ்வு, சந்தித்த அனுபவங்கள், நேரிட்ட சிக்கல்கள், மாற்ற வேண்டிய விசயங்கள் அனைத்தும் அவனது மனதில் பதிவாகின்றன. அப்பகுதி மக்களின் மொழியும் அவனிடம் பதிவாகிக் கிடக்கிறது. இந்நிலையில் வட்டார இலக்கியத்தையோ தலித் இலக்கியத்தையோ படைப்பாளியால் நேர்த்தியாகப் படைக்க முடியும்.

"கிராமிய நாவல்களைப் படைக்கும் ஒரு படைப்பாளன் அவ்வட்டார மண்ணோடு உறவு கொண்டவனாக இருக்க வேண்டும். அவ்வுறவுதான் அவ்வட்டாரப் பண்பாட்டை, மொழியை, கலாச்சாரத்தை, பழக்க வழக்கங்களை இடப்பின்னணியை மாந்தர்களைச் சித்தரிக்கத் துணைபுரியும்"[6]

என்ற கருத்து படைப்பாளனுக்கும், கிராமப் பண்பாட்டுக்குமான உறவை எடுத்தோதுகிறது.

தலித்துகளின் பண்பாடு கிராமம் சார்ந்த பண்பாடு ஆகும். நாட்டுபுறப் பண்பாட்டில் தலித்துகளின் பங்களிப்பு முக்கியமானது எனலாம்.

**தலித் கலைகள்**

தலித்துகள் நாட்டுப்புறங்களில் வாழ்கின்றனர். அவர்களது கலைகள் நாட்டுப்புறக் கலைகளாக அமைகின்றன.

- நாட்டுப்புறக் கதைகள்
- தாலாட்டுப் பாடல்
- மழைப்பாடல்
- தொழிற்பாடல்
- விழாப்பாடல்
- வழிபாட்டுப் பாடல்
- நாட்டுப்புற இசைக்கருவிகள்
- கூத்து
- கரகாட்டம்

ஆகிய கலைகள் பற்றிய குறிப்புகள் அழகிய பெரியவன் கதைகளில் காணக் கிடைக்கின்றன.

**நாட்டுப்புறக் கதைகள்**

எழுத்து வடிவத்தின் செவ்வியல் தன்மையுடன் கைகோர்த்துக்கொண்டு தலித் இலக்கியம் நடைபோடுவதில்லை. பண்பட்ட மொழியமைப்பில் எழுதப்படும் வாக்கியங்களோடு அது தன்னைக் கவர்ச்சியாக்கிக் கொள்வதில்லை. அதன் அழகு பேச்சு மொழியில் உள்ளது. சேரிகளின் ஊடும் பாவுமாய்க் கிடக்கும் வாய்மொழிக் கதைகளோடு கொண்ட ஒட்டுறவுதான் தலித்இலக்கியத்தைச் செழுமைபடுத்துகிறது.

“தலித் இலக்கியம் எழுத்து வடிவத்தோடு நின்று விடுவதில்லை. எழுத்தறிவு மறுக்கப்பட்ட அவர்களது மூதாதையர்களின் வாய்மொழிக் கதைகளையும் நிகழ்த்துக் கலைகளையும் ஒருங்கு சேர்த்துப் பார்க்கும்போதுதான் தலித் இலக்கியத்தின் புரணத்துவத்தை உணர முடியும்”[7]

என்பதில் வாய்மொழி மரபுக்கும் தலித் இலக்கியத்துக்குமான உறவு விளக்கப்படுகிறது.

அழகிய பெரியவன் தேவையான இடங்களில் நாட்டுப்புறக்கதைகள், நாட்டுப்புறப் பாடல் போன்றவற்றை இணைக்கிறார். “தண்ணிக்கட்டுநாள்” கதையில் வரும் யுதாவின் பாட்டி கதை கூறும் ஆற்றல் பெற்றவளாக விளங்குகிறார். இயற்கை இகந்த கதைளை அவள் யுதாவுக்கு உரைக்கிறாள். ஒரு பறவை யுதாவை அவனது வீட்டிலிருந்து தூக்கி பீக்காட்டில் கொண்டுவந்து போட்டதாக அவள் சொல்லும் கதையிலிருந்துதான் அவர் இந்தச் சிறுகதையைத் தொடங்குகிறார். ஆயா இரவுகளில் யுதாவிடம் கதை சொல்லும் பழக்கமுடையவளாக இருந்தாள். அவளது கதைகளில் நாட்டுப்புற இலக்கியச் சாயலைக் காணமுடிகிறது.

வடதமிழகத்தில் சாவுச் சடங்கில் “நடுகாட்டுக் கதை” சொல்லும் வழக்கம் உள்ளது. ஊர் எல்லை முடிந்து சுடுகாட்டின் எல்லை தொடங்குமிடம் நடுகாடு எனப்படும். பிணத்தைப் புதைக்கவோ, எரிக்கவோ கொண்டு போகும் போது அந்த இடத்தில் உள்ள அரிச்சந்திர மேடையிலோ, தரையிலோ பாடையை வைத்துத் தோட்டி நடுகாட்டுக்கதையைச் சொல்வது வழக்கம். இன்றளவும் வடதமிழக கிராமங்களில் பிணம் புதைப்பதற்கு முன்பாக நடுகாட்டுக்கதை சொல்லப்படுகிறது. இது வட்டாரத்துக்கு ஏற்றவாறு சிற்சில மாற்றங்களோடு இருக்கும். இந்தக்கதை பாடல் வடிவில் அமையப் பெற்றதாகும். அழகிய பெரியவன் ஒன்பது பக்கத்தில் இக்கதையை விரிவாகத் தருகின்றார்.

அழகியபெரியவன் “வல்லிசை” என்ற புதினத்தில் வேறு சில நாட்டுப்புறக் கதைகளையும் தருகிறார். கெங்கையம்மனையும் சிவனையும் பற்றிய நாட்டுப்புறக்கதை அவற்றிலொன்றாகும்.

‘ஊரைக்காக்கிற வேலையைச் செய்கிறவன் ஊர்த்தோட்டி. அவனே சிவன். அவ்வூரில்

*இருக்கும் கெங்கையம்மாள் அழகான ரூபவதி. அவள் ஒருநாள் நீர் எடுக்கச் செல்லும்போது எருமைக்கடாவொன்று துரத்தியது. அது தனது முன்காலால் புழுதியை உதைத்துக் கிளப்பியது. பயந்து ஒடும் கெங்கையம்மாள் சிவனிடம் அடைக்கலம் கோரினாள். பாதுகாப்பளித்தால் என்ன செய்வாய் என்றார் சிவன். திருமணம் செய்துகொள்கிறேன் என்று சொன்னாள் கெங்கையம்மாள். எருமையை என்ன செய்ய வேண்டும் என்றார் சிவன். அதை வெட்டி அதன் வாயில் முன் வலது காலைத் துருத்தி, ஊர்வலம் வரவேண்டும் என்றாள் கெங்கையம்மாள். அவள் கட்டளையை நிறைவேற்றிய பிறகு மணம்முடிக்க வந்தார் சிவன். 'நீ தோட்டி. உன்னைக் கல்யாணம் செய்ய முடியாது" என்று மறுத்துவிட்டாள் கெங்கையம்மாள். கோபம்கொண்ட சிவன் அவளைத் திட்டி அவமதித்து தன் பாதுகாப்பிலிருந்து விரட்டிவிட்டார்"*[8] என்பது *அந்நாட்டுப்புறக் கதையாகும்.*

**தாலாட்டுப்பாடல்**

*நாட்டுப்புறப்பாடல்களைத் தாலாட்டுப் பாடல்கள், குழந்தைப் பாடல்கள், காதல் பாடல்கள், தொழிற் பாடல்கள், கொண்டாட்டப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், பக்திப் பாடல்கள் என ஏழு வகையாகப் பகுப்பர்.*

*தாலாட்டுப்பாடல் என்பது தாயையும் குழந்தையையும் இணைக்கும். கலைவடிவமாக அமைகின்றது.*

***'தாயின் நாவசைவால் விளைவது தாலாட்டு. தால் என்றால் நாக்கு. தாலை (நாவினை) அசைத்துப்பாடுவதால் தாலாட்டு எனப் பெயர்பெற்றது'***[9]

*என்பர்.*

*"பால்மறதி" என்ற கதையில் ரேவதி தன் குழந்தையை ஏணையில் போட்டு ஆட்டியபடி தாலாட்டுகிறாள்.*

***"வடக்கே மழ பேஞ்சி***
***வளர்ந்த மணல் ஓடிவர***
***நடந்துபோ பாலகனே ஒன்***
***நல்ல தடம் நா காண ..."***[10]

*என்று பாடுகிறாள். நாவல் உரைநடை வடிவிலமைந்தது என்றாலும் பொருத்தமான இடங்களில் அது கவிதையைத் தன்னுடன் சேர்த்துக் கொள்கிறது.*

**மழைப்பாடல்**

*நாட்டுப்புற மக்களின் வாய்மொழி இலக்கிய ஈடுபாடு குறித்து "வண்ணத்துப் புச்சிகள் பறந்துவிட்டன" என்ற சிறுகதை புலப்படுத்துகின்றது. முந்தைய தலைமுறையைச் சார்ந்தவர்கள் வாய்மொழி இலக்கியங்களோடு நெருக்கம் கொண்டவர்கள் என்றும் இன்றைய தலைமுறை வாய்மொழி இலக்கியப் பிடிப்பற்றவர்கள் என்றும் பொதுவெளியில் நம்பப்படுகின்றன. திரைப்படம், தொலைக்காட்சி போன்ற தகவல் தொடர்பு சாதனங்களின் தாக்கத்தால் மக்கள் நாட்டார் இலக்கிய மரபுகளிலிருந்து விலகிநிற்பதாகக் கருதப்படுகின்றது. இதில் ஒரளவு உண்மை. இருக்கின்றது. ஆனால் கிராமங்கள் இன்னும் நாட்டுப்புறக்கதைகளையும், நாட்டுப்புறப்பாடல்களையும் பொக்கிசுங்களாகச் சேமித்து வைத்துள்ளன என்பதுதான் உண்மை "வண்ணத்துப்புச்சிகள் பறந்துவிட்டன" என்ற கதையில் வரும் யாழினியும் ஓவியனும் நாட்டுப்புற வழக்கிலுள்ள மழைப் பாடலைப் பாடுகின்றனர்.*

***"மழவருது மழவருது***
***நெல்லை வாருங்க***
***நான்போய் கெணத்துல வீழறேன்***
***என்னப் பிடிங்க***
***ஏரு ஓட்டற மாமனுக்கு***
***எண்ணி வையுங்க***
***சும்மா இருக்கிற மாமனுக்கு***
***சூடு வையுங்க"***[11]

*என்றநாட்டுப்புறப்பாடலைஉயிரோட்டமாகப் பாடுகின்றனர். மழைக்காலத்தின் பின்னணி இசையாக அது அமைகின்றது.*

**தொழிற் பாடல்கள்**

*நாட்டார் பாடல்கள் புனிதங்களைக் கட்டமைப்பவையல்ல. அவை நாட்டுப்புற மக்களின் இயல்பான மன வெளிப்பாடாக*

அமைகின்றன. அதில் வசைகள், எள்ளல்கன் போன்றவை இடம் பெறுவதைப் பார்த்து முகம் சுழிக்க வேண்டியதில்லை. அவற்றைப் பாசாங்கற்ற இயல்பான பதிவுகளாகவே கருத வேண்டும். "செவிப்பறை" கதையில் இடம்பெறும் பாடல் இவ்வகைப்பட்டது. இதே கதையில் பார்வதி எனும் மூதாட்டி "அகிலோ பரிமளமே" எனத் தொடங்கி நாட்டுப்புறப்பாடலொன்றைப் பாடுகிறாள்.

***"அகிலோ பரிமளமே***
***ஒயிலான மானினமே***
***அடியென் அஞ்சுகமே***
***பஞ்சவர்ண கொஞ்சுங்கிளி வாகனமே***
***ஆனாலும் பெண்ணரசி"*** [12]

என்று மேளக்காரர்களின் கை சலிக்கும் வரை அப்பெண் பாடுகிறாள். நடவுப் பாட்டு, கும்மி, தாலாட்டு, ஒப்பாரி ஆகிய வகைகளில் நாட்டுப்புறப்பாடல்களைப் பாடும்திறன் பெற்றவளாக அப்பெண் விளங்குகிறாள். கிராமப்புற தலித் பெண்கள் பல்வகை கலைத் திறனும் பெற்று விளங்குவதை இது நிறுவுகிறது.

### விழாப்பாடல்

"சணிப்புக்காலம்" கதையில் நாட்டுப்புறப்பாடல் இடம்பெறுகிறது. பொங்கல் அன்று காலை மேளச் சத்தத்தோடு இப்பாடல் ஒலிக்கிறது

***'பொங்கலோ பொங்கலு***
***ஒங்கக்காளுக்கு நா தாறேன்***
***தொங்குலோ தொங்கலு***
***போகி போச்சி பொங்குலும் போச்சி***
***மாமோய் ஓம்பொண்ணக் குடு'*** [13]

என்று நாட்டுப்புறப்பாடலை எடுத்தாளுகின்றார். பொங்கல் அன்று பாடப்படுவதால் இதனை விழாப்பாடல் எனலாம்.

### வழிபாட்டுப் பாடல்கள்

"வல்லிசை" என்ற புதினத்தில் கெங்கையம்மனைப் புகழ்ந்து பாடும் நாட்டுப்புறப் பாடல் இடம்பெற்றுள்ளது.

***'மட்ட மட்ட மாமரன்டி - பெண்ணே***
***மயிலிறங்கும் சத்திரன்டி***
***குள்ளக்குள்ள மாமரன்டி - பெண்ணே***
***குயிலிறங்கும் சத்திரன்டி***
***சின்னத்தேரில் ஏறிக்கொண்டு***
***சிங்காரமாய் நானிருந்தேன் - இந்த***
***அக்கிரமக்காரன் வந்து நின்று***
***அறுக்கிறான்டி எந்தன் தாலியை***
***மோசக்காரன் வந்து நின்று***
***கழற்றறான்டி என்தாலியை"*** [14]

என்று கெங்கையம்மனின் தாலியை அறுக்கும் போது மேளமடித்துப் பெரியவர்கள் புலம்பிப் பாடுகின்றனர்.

### நாட்டுப்புற இசைக்கருவிகள்

தமிழர்களின் இசைக் கருவிகளில் ஒன்றாகப் பறை விளங்குகின்றது. இது தோலால் ஆன இசைக்கருவியாகும். பறை என்பதற்குப் பேசுதல் என்ற பொருள் உண்டு. பேசு வதை இசைக்க வல்ல இசைக்கருவியைப் பறை என அழைத்தனர். தொல்குடித் தமிழ்ச்சமூகம் பறையைத் தனது இசைச் சொத்தாகக் கருதியது. பறை என்ற இக்கருவிக்குத் "தப்பு" என்ற பெயரும் உண்டு. பழங்காலத்தில் இது தகவல் தொடர்பு சாதனமாக இருந்தது. பறையடித்து அரசனின் செய்திகள் மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டன. குறிஞ்சிப்பறை, முல்லைப்பறை, மருதப்பறை, நெய்தற்பறை, பாலைப்பறை என ஐந்திணைகளிலும் பறை இசை ஒலித்தது, தொண்டகப்பறை, அரிப்பறை, மென்பறை, இன்னிசைப்பறை, பொருநர்பறை, ஆடுகளப்பறை எனப் பலவகைப்பட்ட பறைகள் சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டன.

தப்புக் கருவியில் வட்டச்சட்டம், மாட்டுத்தோல், உலோகத்தட்டு என்ற மூன்று பகுதிகள் உள்ளன.

தப்புக் கருவியை இசைப்பவர்கள் இரண்டு வகை குச்சிகளைப் பயன் படுத்துகின்றனர். இடது கையில் உள்ள குச்சி சிம்புக்குச்சி என அழைக்கப்படுகிறது. வலது கையில் வைத்திருக்கும் குச்சி அடிக்குச்சி என அழைக்கப்படுகிறது. உருட்டுக்குச்சி என்று பெயரும் இதற்குண்டு, இசை எழுப்புவதோடு

*பறையின் பணி முடிந்து விடுவதில்லை. பறையைக் கையில் வைத்துக்கொண்டு நடனம் ஆடமுடியும்*

*அரிப்பறை, ஆளெறிப்பறை, உவகைப்பறை, சாப்பறை, சாக்காட்டுப்பறை, நெய்தற்பறை, மீன்கோட்பறை, கல்லவடப்பறை, தொண்டகப்பறை, குறும்பறை, கொடுகொட்டி நாவாய்ப்பறை, பன்றிப்பறை, போர்ப்பறை, வெறியாட்டுப்பறை போன்ற பறைகளின் பெயர்களை இலக்கியத்திலிருந்து அறியமுடிகிறது.*

*பறை அடித்தல் என்பது சாவுக்குப் பறை அடித்தல் என்பதாக ஒரு காலத்தில் புரிந்து கொள்ளப்பட்டது.*

***"அனிச்சப்பு கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு நல்ல படாஅ பறை'*** [15]

*என்ற குறளில் சாவில் அடிக்கப்படும் பறை பற்றிய குறிப்பு இடம் பெறுகின்றது. தற்காலத்தில் பறை என்பது போராட்டத்தின் அடையாளமாகவும், மகிழ்ச்சியின் அடையாளமாகவும் மாறிவருகின்றது.*

*"செவிப்பறை" என்ற சிறுகதை பறை பற்றிய பிரமாண்டமான கற்பனை பிம்பங்களைக் கட்டியெழுப்புகிறது. கனவுக்காட்சி என்றாலும் அது பறை பற்றிய அழகியல் வருணனையாக அமைகிறது.*

*'அன்றிரவு அவன் கனவொன்று காண நேர்ந்தது. இதற்கு முன் வாழ்வில் இடை ஊடியிராத கனவு. எதுவுமற்ற வெளியில் எல்லாமே பறைகளாகத் தெரிகிறது. வானம் மாபெரும் பறையாக. புமியும் மாபெரும் பறையாக. ஒடுகையிலும், நடக்கையிலும் அதிரும் பூமி பறை. நிலவும் பறையே. வழியெங்கும் பறைகளே. சின்னக் குழந்தை பார்வதியை பறைகளினூடாகத் தேடி அலைந்தான். அவன் மூச்சும், தொடுகையும் பட்டு பறைகளில் எழுந்த இசை அலைகள் அவனை விரட்டுகின்றன. வெகுதூரம் ஒடி, ஒரு சமவெளியைக் காண்கிறான். அந்த இருட்டு வெளிப் பார்வைக்குத் தெளிந்தபோது குயில்களால் நிறைந்திருக்கிறது. தோளிலும்கைகளிலும்குயில்களுடன்பார்வதி அங்கிருக்கிறாள். அவன் நிலா பறையை எடுத்துக் கொள்கிறான். நடந்து நடந்து மலையுச்சியை அடைகின்றனர். அவள் பாடுகின்றாள். அவன் பறை இசைக்கிறான். சமவெளி முழுதும் பாட்டாகி, வானமும் நிறைந்து சப்தத்துளிகளால் அடித்துப் பெய்கிறது பாட்டு மழை"* [16]

*எனப் பறை பற்றிய புதிய பார்வையை அழகியபெரியவன் வெளிப்படுத்துகிறார்.*

*நாட்டார் இசையில் முக்கியப் பங்காற்றும் மேளம் பற்றிய குறிப்பை அழகிய பெரியவன் தருகிறார்.*

*மேளங்களைச் சுடாக்குதல், உற்சாகமாக அடித்தல், தாள லயத்தோடு இசைத்தல், பண்டிகை மனநிலையைப் பெருக்குதல், மேளமடித்து ஊர்சுற்றுதல் ஆகிய செய்திகள் இதில் இடம் பெறுகின்றன.*

***"பகல் மெல்லத் தெளிந்தபோது மேளக்காரர்கள் மேளங்களைக் காய்ச்சிகொண்டு ஊரைச் சுற்றினார்கள். பண்டிகை காலங்களில் அடிக்கும் அடியே தனிதான்.***

***"டட்டாங்கு டங்கு டங்கு டங் டங் டங்."***

*மேளக்காரன் பையன்கள் சூழ ஊர்வலம் வந்தார்கள். பண்டிகை தருகிற தனி மனநிலையை அனுபவித்தபடி நின்றிருந்தாள் கற்பகம்.*

*என மேளம் பற்றிய வருணனை அமைகிறது.*

*"சின்னக்குடை" என்ற புதினத்தில் வரும் செங்கையன் பம்பை எனும் இசைக் கருவியை மாரியம்மன் பண்டிகைகளில் வாசிக்கிறான்.* [17]

*தப்பு என்ற இசைக்கருவியை இசைத்து மகிழும் கிராமத்து மனிதர்கள் "செவிப்பறை" கதையில் இடம் பெறுகின்றனர்.* [18]

*இக்கதையில் சின்னக்குழந்தை என்பவன் தப்புக் கலைஞனாக வருகிறான். அவன் இசைக்கருவியைத் தடவிப் பார்த்துக் கிளர்ச்சியடைகிறான். தப்பு இசைப்பதில் அவன் வல்லவனாக விளங்குகின்றான் ஒண்டி மேளம் இசைப்பதில் அவன் திறன் மிக்கவனாக இருக்கிறான். திருமணம், சாவு விழாக்கள், ஊர்கோலம், பூப்புவிழா, காதுகுத்துதல் ஆகிய அனைத்திலும் அவன் தப்பு வாசிக்கிறான்.*

ஒத்தடி, ஒட்டியடி. அலங்காரம், துள்ளல், டங்கு என அனைத்து வகை தாளங்களையும் வாசிக்கிறான். தாளத்தை அவன் வெறிபிடித்தது போல அடிக்கிறான். அவனது கைகள், மேளக்குச்சி, உடல், இசை அனைத்தும் துள்ளும் படி வாசிக்கிறான். சின்னக்குழந்தை என்பவன் இசைமீட்டும் அனுபவத்தை அழகிய பெரியவனின் நேரடிச் சொற்களில் அறிவது தப்பு இசை பற்றிய பரவச மனநிலையை உருவாக்கும்.

'சின்னக்குழந்தை வெறியாய் அடித்துக் கொண்டிருந்தான். அவன் மனமும் அடிபோலவே துள்ளியது. கண்கள் பிரகாசமடைந்து நீர்ப்பற்றுடன் மின்னின. பற்கள் வெளித்தெரிய முகம் விரிந்தது. அவன் கைகளும், மேளக்குச்சியும், உடலும், இசையும் எல்லாமே துள்ளல். காற்று அதிர்ந்து மாட்டுக்கொட்டகையும், வீடும், வீதிகளும் எகிறின. போடு போடென்று போட்டான். நரம்புகள் விடைக்க ஆடச்சொல்கிற அழைப்பு ஒவ்வோர் அடியிலும் விழுந்தது. காட்டுராஜா ஆடவும் தொடங்கி விட்டிருந்தான்''[19]

என்று அந்த இசை அனுபவத்தை விளக்குகிறது.

**கூத்து**

கூத்தில் தெருக்கூத்து, கழைக்கூத்து, பாவைக்கூத்து போன்ற வகைகள் காணப்படுகின்றன. சு.சக்திவேல்

'கூத்து பழமையின் சின்னமாக பண்பாட்டின் எச்சமாக விளங்குகிறது'[20] என்கிறார்.

மேலும் 'தெருவில் நடத்தப்படும் கூத்து தெருகூத்து. நாடக மேடையோ காட்சித் திரைகளோ இல்லாமல் எளிய முறையில் தெருவிலும் திறந்த வெளி அரங்கிலும் இரவு முழுவதும் நடைபெறும் கூத்து தெருக்கூத்து'[21] என்ற செய்தியையும் தருகிறார்.

பங்குனி மாதத்தில் நடைபெறும் காமன் கூத்து பற்றி ''வல்லிசை'' என்ற புதினம் விவரிக்கிறது. காமன் கூத்தில் சிங்காரம் என்பவன் ரதியாக வேடம் கட்டுகிறான். மேளம் தான் கூத்தை உயிர்த்துடிப்படன் இயக்குகிறது. இரவு முழுவதும் கூத்து நடைபெறுகின்றது. கூத்தின் இடையே பாடல்களும் இடம்பெறுகின்றன. மன்மதனை ஈசன் எரித்த பிறகு ரதி பாடும் பாடல் கீழே தரப்படுகிறது.

***'என் தாலி அறுந்தது போல்***
***உன் தாலி அறாதா?***
***நீ அணிந்திருக்கும் புலித்தோலை***
***எலிகடித்ததுப் போகாதா?***
***கழுத்திலிருக்கும் நாகசர்ப்பம்***
***உன்னைக் கொத்தாதா?***
***என்னைப்போல் அறுப்பாளா***
***என்தாய் ஈஸ்வரியும்,***
***அவள் வெள்ளைப்புடவையுடுத்தி***
***வெளியில் வரக் காண்பேனோ?'[22]***

என்று ரதி பாடுகின்றாள். ''அம்மா உழைப்பதை நிறுத்திக்கொண்டார்'' என்ற கதையில் கதைத்தலைவனின் தந்தை கூத்துக் கலைஞராக வருகிறார்.[23] அவரைக் கதைத்தலைவன் கூத்தாடி என அடையாளப்படுத்துகிறான். வன்மமும், குரூரமும், வேற்றுமை மனமும் கொண்டவர்கள் கலைஞர்களாக முடியாது என்று விளக்கம் தருகிறான்.

''பின்தொடரும் பெண்'' என்ற சிறுகதையில் கூத்துக் கலைஞர்கள் கதா மாந்தர்களாக்கப்பட்டுள்ளனர். சிங்காரம், பீமராஜ், பெருமாள் போன்ற பாத்திரங்கள் கூத்து நிகழ்த்துவது பற்றி உரையாடுகிறார்கள். பீமராஜ் கூத்துக்குரிய பாடலைப் பாடிக் கொண்டு ஒயிலாக ஆடுகிறான். சிங்காரம் அர்ச்சுனனாக மாறி மிடுக்குநடை போடுகிறான் வாயில் தாளமிட்டபடியே பெருமாள் அவர்களைச் சுற்றி வந்து குதிக்கிறான். பீமராஜ் கூத்தில் பாடும் பாடலைப் பாடிக் காட்டுகிறான்

***'கட்டில் உண்டு மெத்தையுண்டு***
***கால் பிடிக்கத் தாதியுண்டு மன்னவா,***
***ஓரடுக்கு பஞ்சணை மன்னவா. அதில்***
***ஓடி நாமும் ஆடுவோமே மன்னவா!***
***பருவக்காலம் போகிறதே மன்னவா.***
***ஏறெடுத்து பார்க்க மாட்டாயோ மன்னவா?'[24]***

என்று பாடுகிறான்

நல்லதங்காள், விராடபருவம், சித்திரசேனன், கருவபங்கம், துரோபதை துகில், அர்ச்சுனன் தபசு ஆகிய தலைப்புகளில் கூத்துகள் நிகழ்த்தப்பட்டதாக இக்கதை கூறுகின்றது. தெருக்கூத்துக் கலை கிராமங்களில் சிறப்புற்று விளங்குவதை "வல்லிசை" நாவல் எடுத்துக் காட்டுகிறது. தெருக்கூத்துக்கள் சமூகச் சிக்கல்களைக் கதையினூடே சொல்லி விழிப்புணர்வுட்டுவதை இக்கதை விவரிக்கிறது. தெருக்கூத்தில் இடம் பெறும் பாடலொன்று கீழே தரப்படுகின்றது.

**'காலம்புராக் கசுடப்பட்டும்**
**கஞ்சித்தண்ணி இல்லாம**
**காலங் கழிக்கிறன்டா! கடவுளே!- எங்களிடம்**
**காசுபணம் இல்லையேடா கடவுளே!**
**மக்காச்சோளம்**
**மஞ்சாச்சோளம்**
**மக்கள் தினம் தின்னதாலே**
**சொறிசிரங்கு வருகுதடா கடவுளே!- சொறிஞ்சி**
**கையெல்லாம் நோகுதடா கடவுளே!'**[25]

என்பது தெருக்கூத்துப்பாடலாகும். கடவுளைக் கேள்வி கேட்டல், விமர்சித்தல், பகடி செய்தல், ஒருமையில் அழைத்தல் போன்ற கலக நடவடிக்கைகளில் நாட்டுப்புறக்கலைகள் இயங்குவதனை இப்பாடல் வழி உணர முடிகிறது.

**கரகம்**

"மாரியம்மன் விழாக்களில் கரகம் ஆடப்படுவது பற்றி நீர்ப்பரப்பு" என்ற கதை விளக்குகிறது.[26]

மாரியம்மன் கோயிலின் பக்கத்தில் கரகாட்டம் நிகழ்ச்சி நடைபெறுகிறது. கரகாட்டக்கலையில் தேர்ந்த பெண்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வாத்தியக்காரர்களின் இசைக்கு ஏற்ப ஆடுகின்றனர். இது கரகாட்டம் பற்றிய மேலோட்டமான பதிவாக அமைகிறது.

**முடிவுகள்**

"அழகிய பெரியவன் சுட்டும் தலித் கலைகள்" என்ற ஆய்வில் கண்டறிந்த முடிவுகள் கீழே தரப்படுகின்றன.

- கலை என்பது பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாக அமைகின்றது.
- தலித்மக்களின்அரசியலின்ஒருபகுதியாகத் தலித் பண்பாடு விளங்குகின்றது.
- அழகியபெரியவன் கிறித்தவப் பின்னணியிலிருந்து வந்தாலும் மேற்கத்திய கலைகளைத் தூக்கிப் பிடிக்காமல் தலித் கலைகளையே தூக்கிப் பிடிக்கிறார்.
- நாட்டுப்புறக்கதைகள், தாலாட்டுப்பாடல், மழைப்பாடல், தொழிற்பாடல், விழாப்பாடல், வழிபாட்டுப்பாடல், நாட்டுப்புற இசைக் கருவிகள், கூத்து, கரகாட்டம் ஆகிய கலைகள் பற்றி அழகிய பெரியவன் விளக்கியுள்ளார்.
- தலித் மக்களின் நாட்டுப்புறக் கலைகள் கடவுளை விமர்சித்தல், கேள்விகேட்டல், பகடி செய்தல், ஒருமையில் அழைத்தல் எனக் கலகப்பனுவல்களாகத் திகழுகின்றன.

**அடிக்குறிப்பு**

1. தொல். திருமாவளவன், அமைப்பாய்த் திரள்வோம், ப.294.
2. த. அருள்பத்மராசன், தமிழ்பண்பாடு, ப.3.
3. ராஜ் கௌதமன், தலித்பண்பாடு, ப.18.
4. அழகிய பெரியவன், மறைத்துப் பேச என்ன இருக்கு, ப.17.
5. தொல். திருமாவளவன், அமைப்பாய்த்திரள்வோம், ப.290.
6. சாந்தினி மெ. தாஸ், குமரி மாவட்ட சமூக அரசியல் வரலாறு, பக்.12,13.
7. ஆதவன் தீட்சண்யா, ஆகாயத்தில் எறிந்தகல், ப.54.
8. அழகிய பெரியவன், வல்லிசை, ப.205.
9. ஞானம், நாட்டுப்புற இயல் தோற்றமும் வளர்ச்சியும், ப.28.
10. அழகிய பெரியவன், தெரிக்கட்டு, பக்.30,31.
11. அழகிய பெரியவன், அழகிய பெரியவன் கதைகள், பக் 198,199.
12. அழகிய பெரியவன், குறடு, ப.54.

13. மேலது, ப.94.
14. அழகிய பெரியவன், வல்லிசை, ப.204.
15. திருக்குறள், 115.
16. அழகிய பெரியவன், குறடு, ப.56.
17. அழகிய பெரியவன், சின்னக்குடை, ப.70.
18. அழகிய பெரியவன், குறடு, ப.54.
19. அழகிய பெரியவன், அழகிய பெரியவன் கதைகள், ப.261.
20. சு. சக்திவேல், நாட்டுப்புறவியல் ஆய்வு, ப.182.
21. மேலது, ப.183.
22. அழகிய பெரியவன், வல்லிசை, ப.139.
23. அழகிய பெரியவன், அம்மா உழைப்பதை நிறுத்திக்கொண்டார், ப.10.
24. மேலது, ப.13.
25. அழகியபெரியவன், வல்லிசை, ப.66.
26. அழகியபெரியவன், அழகியபெரியவன் கதைகள், ப.257.